


இராமாவதார மகிமை 108 பாசந்தி மணிமாலை

ஆஸ்திக அன்பர்களுக்கு அநேக நமஸ்காரம்.

கடந்த 20 ஆண்டுகளாக நான் எனது குடும்பத்துடன் சென்னை உள்ளகரத்தில் வசித்து வருகிறேன்.1998-ல் வளர்த்த குரு பல்லவி நரசிம்மாச்சாரியார் மறைவுக்குப்பின் -2001ல் மானசீக குரு எனது தகப்பனார் சங்கீத சாகித்ய வித்வான் சாகித்ய கலாபூஷணம் மன்னார்குடி பார்த்தசாரதி அய்யங்காரின் மறைவுக்குப்பின் - 2002 முதல் உள்ளகரம் திரு நா.கோபாலகிருஷ்ண பாகவதர் (திரு நாகோ) என் அபிமான குருவாய் இன்று வரை வழி நடத்தி வருகிறார்.

உள்ளகரம் விஜயகணபதி ஆலயத்தை நிர்மாணித்தவர். பல ஆண்டுகளாய் தொடர்ந்து ராதாகல்யாணம் வள்ளி கல்யாணம் திவ்யநாம பஜனை சொற்பொழிவு நடத்தி வருபவர். ஸ்ரீவிஜயகணபதி ஆலயத்தில் கணபதி ஹோமம் 15வருடங்களாக தொடர்ந்து நடந்துவர காரணமாயிருப்பவர். சிங்கப்பூருக்கு சென்று திருப்புகழ் தேவாரம் பஜனையும் நடத்தியவர். எல்லாம் குருவருள் திருவருள். அவர் அருளால்தான் பாசந்தி ராமாயணம் 108 இயற்ற முடிந்தது.

இந்நூலிற்கு முழு நிதியுதவி அளித்த ராமகிருஷ்ண மாணவர் இல்லத்தில் என்னுடன் படித்த திரு.சுப்ரமணியன் அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறேன். எனக்கு உற்சாகமளித்து வரும் உற்றார் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன்.இந்நூலை என் அபிமான குருவின் சார்பாக சமர்ப்பிக்கிறேன்.

இந்நூலை எழுதிய என்னைக்காட்டிலும் இதனை எழுதப் பணித்த எனது அபிமான குருவுக்கும் இதைப்பாராயணம் செய்வோர்க்கே பலன் மிகுதி என தெரிவித்துக்கொள்கிறேன். ஆஸ்திக அன்பர்கள் இதனைப் படித்து பயன்பெற்று மேன்மேலும் இப்பணி தொடர்ந்திட என்னையும் வாழ்த்திட எல்லாம் வல்ல இறைவன் பாதம் பணிகின்றேன்.

எமது அடுத்த வெளியீடு பாசந்தி பாகவதம் 108.

கவிநயச்செல்வர் மன்னை பாசந்தி

பாசந்தி இராமாயணம் நூற்று எட்டு

வாழ்த்துப்பா

நூறு தெய்வங்கள் இருந்தாலும் இராமனுக்கு நிகர் ஆகுமோ
நூறு நூல்கள் இருந்தாலும் இராம கதைக்கு இணையாகுமோ
நூற்று எட்டு ஜபத்தினில் இராமாயணம் சொல்ல முடியுமோ
நூறு வயதையும் தாண்டி வாழ பாசந்தியை வாழ்த்தும் நாகோ

பாசந்தி ராமாயணம் பாராயணம் செய்ததுமே
பாரினில் பரகதி கிடைத்திட வழி பிறக்குமே
பாபங்கள் ஒழிந்திட்டு புண்ணியம் ஏற்படுமே
பாரோர் வாழ்க்கைதனில் நல்வளம் பெருகுமே

மன்னை பாசந்தியின் அபிமான குரு உள்ளகரம்
நா. கோபாலகிருஷ்ண பாகவதர் (நா.கோ)

இராமாவதார கதைச்சுருக்கம்

பல்லவி

ரகுகுல திலகம் ஸ்ரீராமம்
தாரக மந்திரம் அவன் நாமம் (ரகு)

அநுபல்லவி

இகத்தில் தாய் தந்தை சொல்லே மந்திரம்
ஜகத்தில் சரணடைந்தோரை காப்பவனும் (ரகு)

சரணம்

இராவணனை அழிக்கவே நவமியில் உதித்தான்
தர்மம்வழிநின்று அதர்மத்தை அழித்தான்
ஏகபத்னி விரதத்தைக் கடைபிடித்தான்
ராமநாமத்தை நமக்கே அருளினான் (ரகு)

பால காண்டம்

1. திரேதாயுகத்தில் கோசலம் தலைநகர் அயோத்தியின் அரச ராம்
2. சூரியகுலத்தில்பிறந்து நெடுங்காலம் செங்கோல் தாங்கியவ ராம்
3. அயோத்தியை தசரத மகாசக்ரவர்த்தி திறம்படஆட்சிபுரிந்தா ராம்
4. வெகுநாளாக மகப்பேறு பாக்கியமின்றி தவியாய் தவித்தவ ராம்
5. ரிஷ்யசிருங்கமகரிஷி மூலம் புத்ரகாமேஷ்டியாகம் நடத்தியவ ராம்
6. அந்தயாகத்தில் பாயசம் நிறைந்த கனகக்கலசம் கிடைத்தவ ராம்
7. கிடைத்த பாயசத்தை தன்மூன்று மனைவிகளுக்கு அளித்தவ ராம்
8. கௌசல்யை கைகேயி சுமித்ரை மூவரும் பகிர்ந்து உண்டன ராம்
9. ராமன் இலக்குமனன் பரதன் சத்ருகனன் நால்வர் பிறந்தன ராம்
10. அயோத்தி மாநகர மக்கள் முழுவதும் சந்தோஷம் பெற்றன ராம்
11. தம் வேள்வியை காக்க விசுவாமித்ரர் தசரதனை வேண்டினா ராம்
12. விசுவாமித்ரருடன் இராமனும் இலக்குமனனும் காடு சென்றன ராம்
13. அசுரனான சுபாகுவையும் அரக்கி தாடகையையும் வதைத்தா ராம்
14. விசுவாமித்திர மகரிஷியுடன் இராமர் மிதிலாபுரிக்கு போனா ராம்
15. மாடத்தில் நின்றிருந்த ஜனகன் மகளை இராமன் நோக்கினா ராம்
16. பலம் வாய்ந்த சிவதனுசை இராமன் தன் கையால் ஒடித்தா ராம்
17. மிதிலாபுரி மன்னன் ஜனகனின் மகள் ஜானகியை மணந்தா ராம்
18. விஷ்ணுதனுசை நாணேற்றி பரசுராமரின் கர்வம் அடக்கினா ராம்

அயோத்யா காண்டம்

19. அயோத்தி மாநகர மக்கள் முழுவதும் சுவர்க்கமங்கு கண்டன ராம்
20. இராமனை யுவராஜனாக முடிசூட்ட சகலஏற்பாடுகள் செய்தன ராம்
21. கூனி மந்தரையின் மூலம் கைகேயி முழு தகவல் அறிந்தன ராம்
22. கைகேயி தான் பெற்ற இருவரங்களையும் நினைவுபடுத்தினா ராம்
23. தசரதனிடம் கைகேயி இருவரத்தினைக் கேட்டு நிர்பந்தித்தா ராம்
24. அதை கேட்டவுடன் தசரத மகாசக்ரவாத்தி நிலைகுலைந்தா ராம்
25. தந்தை சொற்படி இராமன் சீதையுடன் அரியணை துறந்தா ராம்
26. சீதையோடு இராமனும் இலக்குமனனும் கானகம் அடைந்தா ராம்
27. வேடனான குகனைத் தன் சகோதரனாய் ஏற்றுக் கொண்டா ராம்
28. அயோத்தி மாநகரமக்கள் மீளமுடியாத சோகத்தில் மூழ்கின ராம்
29. செய்தி கேட்டவுடன் இராமனின் தம்பி பரதன் அழுது புரண்ட ராம்
30. பரதன் சேனையுடன் ராமனைக் காண காட்டுக்கு ஓடிவந்தா ராம்
31. பரதன் சேனையைக் கண்டவுடன் இலக்குமனன் கோபமானா ராம்
32. பரதன் புகழை இலக்குமனனுக்கு இராமன் விரிவாய்சொன்னா ராம்
33. முன் கோபியான இலக்குமனனின் கோபத்தை சற்று தணித்தா ராம்
34. ராமன் ஆளும் ராஜ்ஜியத்தை பரதன் தானாள ஏற்க மறுத்தா ராம்
35. பரதனை தேற்றியபின்னர் ராமன்தன் பாதுகையை கொடுத்தா ராம்
36. இராமனின் பாதுகையை கொண்டு பரதன் நாடாள சம்மதித்த ராம்

ஆரண்ய காண்டம்

37. சீதையோடு இலக்குமனனோடு இராமர் சித்ரகூடம் அடைந்தா ராம்
38. சுரபங்கர் சுதீஷ்ணர் அகஸ்தியர் முனிவர்களைத் தரிசித்தா ராம்
39. அகஸ்தியரின் சொல்படி பஞ்சவடி ஆஸ்ரமத்தில் வசித்தா ராம்
40. அரக்கி சூர்ப்பணகையின் மூக்கை இலக்குமனன் அறுத்தா ராம்
41. சீதை கேட்டதால் பொன்மானை பிடிக்க இராமன் சென்றா ராம்
42. மான் உருவில் வந்த மாரிசனை இராமன் ஓடித் துரத்தினா ராம்
43. இராமன் மாய மானான மாரீசன் மீது தன் அம்பை எய்தா ராம்
44. மாரீசன் 'ஓ லஷ்மணா' என்று சொல்லியபின் உயிர்துறந்தா ராம்
45. அதைகேட்ட சீதை சுடுசொல்லால் இலக்குமனனை வைதா ராம்
46. உடனே இலக்குமனன் அம்பால் கோடிட்டு விட்டு அகன்றா ராம்
47. மாய உருவில் இராவணன் சீதையை அபகரித்துப் போனா ராம்
48. இராமன் தன்சீதாபிராட்டியை தேடியே காணாது வெகுண்டா ராம்
49. புஷ்பகவிமானத்தில் சென்ற சீதையின்குரலை ஜடாயு கேட்டா ராம்
50. போரிட்ட ஜடாயுவின் இறக்கைகளை இராவணன் வெட்டினா ராம்
51. இராமன் சீதாதேவியைத் தேடி காடு முழுவதும் அலைந்தா ராம்
52. இராம இலக்குமனனிடம் ஜடாயு நடந்தைக்கூறி உயிர்விட்டா ராம்
53. இராமன் ஜடாயுவுக்கு ஈமகிரியைசெய்து கௌரவப்படுத்தினா ராம்
54. மதங்கமகரிஷியின் குடிலில் சபரி தந்த பழத்தினை உண்டா ராம்

கிஷ்கிந்தா காண்டம்

55. மிகுந்த சோகத்துடனே ரிஷ்யமுகபர்வதமலையை அடைந்தா ராம்
56. ஆஞ்சநேயனை இராமன் கிஷ்கிந்தையில் கண்டு சந்தித்தா ராம்
57. ஆஞ்சநேயன் மூலம் இராமன் சுக்ரீவனின் நட்பை பெற்றா ராம்
58. சுக்ரீவனிடம் இராமன் தன்னிலையை விரிவாக எடுத்துரைத்தா ராம்
59. இராமனிடம் சுக்ரீவனும் தன்னிலமையை விரித்துரைத்தா ராம்
60. சீதையின் அணிகலன்களை இராமனிடம் சுக்ரீவன் காட்டினா ராம்
61. வாலியினுடைய அக்கிரமத்தை சுக்ரீவன் இராமனிடம் கூறினா ராம்
62. இராமனும் சுக்ரீவனும் பரஸ்பரம் உதவிபுரிய உறுதிபூண்டன ராம்
63. வாலியின் பராக்ரமத்தை இராமனிடம்சுக்ரிவன் வாய்மொழிந்தா ராம்
64. வாலியை வம்புச்சண்டைக்கு சுக்ரிவன் வாவென்று அழைத்தா ராம்
65. வாலியிடம் மனைவி தாரையும் அநேக அறிவுரைகள் கூறினா ராம்
66. வாலி அதனை சிறிதும் கேளாது சுக்ரீவனுடன் போர்புரிந்தா ராம்
67. வாலி யார்என்று காணமுடியாமல் இராமன் சற்று யோசித்தா ராம்
68. அடையாளமாக ஓர் மாலையை சுக்ரீவனுக்கு அணிவித்தா ராம்
69. இராமன் வாலியை மரத்தின்பின் மறைந்து நின்று தாக்கினா ராம்
70. பூமியில் விழுந்தபின்னர் வாலி தன் தவறினை உணர்ந்தா ராம்
71. வாலி தன் மகனின் கையைப் பிடித்து இராமனிடம் தந்தா ராம்
72. இராமன் சுக்ரீவனுக்கு கிஷ்கிந்தையிலே மகுடம் சூட்டினா ராம்

சுந்தர காண்டம்

73. அனுமன் இராமனின்ஆணைப்படி இலங்கைக்கு தூதுசென்றா ராம்
74. அனுமன் சீதாபிராட்டியைக் காணவே கடலைத் தாண்டினா ராம்
75. அனுமன் இலங்கையில் சீதையைக் காணாது தேடியலைந்தா ராம்
76. அனுமன் அசோகவனத்திலே சீதையைத் தேடிப் பார்த்தா ராம்
77. அனுமன் சீதையிடம் இராமனின் கணையாழியைக் காட்டினா ராம்
78. அனுமனிடம் ராமர் வந்து மீட்பார் என்று சீதை சூளுரைத்தா ராம்
79. அனுமன் சீதையிடம் அழகியசூடாமணியை பெற்றுக்கொண்டா ராம்
80. அனுமன் அசோகவனமழித்துபின் இராவணன் தர்பார் போனா ராம்
81. அனுமன் தன் வாலை சுருட்டியே ஆசனமாக்கி அமர்ந்தா ராம்
82. அனுமன் இராவணனிடம் சீதையை விட்டுவிடுமாறு கேட்டா ராம்
83. அனுமன் தூதை இராவணன் சிறிதும் ஏற்க மறுத்துவிட்டா ராம்
84. அனுமன் தன் வாலால் இலங்கையை முழுவதும் எரித்தா ராம்
85. அனுமனின் வருகைக்காகவே இராமன் எதிர்பார்த்து நின்றா ராம்
86. அனுமனோ இராமபிரானிடம் 'கண்டேன் சீதையை' என்றா ராம்
87. அனுமனின் வாயால்கேட்டவுடன் இராமன் கண் கலங்கினா ராம்
88. அனுமனை இராமன் நெஞ்சார அணைத்து கட்டித்தழுவினா ராம்
89. அனுமன் இலங்கையில் நடந்ததை முழுவதும் உரைத்தா ராம்
90. அனுமன் உரைக்க இராமனும் இலக்குமனனும் வருத்தமுற்றா ராம்

யுத்த காண்டம்

91. இலங்கையில் இராவணன் விபீஷணன் புத்திமதி கேட்கமறுத்தா ராம்
92. விபீஷணனை சகோதரனாகஏற்று இராமன் சரணாகதி தந்தா ராம்
93. இராமன்வானரசேனையுடன் சேதுவைக்கட்டி கடலைக் கடந்தா ராம்
94. பலநாள் நடந்த தொடர்யுத்தத்தில் அசுரர்கள் பலர் மடிந்தன ராம்
95. கும்பகர்ணன் செஞ்சோற்றுக்கடன் தீர்க்கவே போரில் மாண்டா ராம்
96. இராவணின் மகன் இந்திரஜித்தை இலக்குமனன் வீழ்த்தினா ராம்
97 செய்திகேட்டஉடன் இராவணன் வெகுண்டு போரிடச் சென்றா ராம்
98. இராமபிரான் இராவணனை 'இன்றுபோய் நாளைவா' என்றா ராம்
99. இராவணன் இராமபிரானை எதிர்க்க போருக்கு திரும்பிவந்தா ராம்
100. இலங்கேஸ்வரன் இராவணனை இராமன் வதைத்து கொன்றா ராம்
101. இராவணனின் தம்பி விபீஷணனுக்கு மகுடத்தை அளித்தா ராம்
102. இராமன் சீதையை அக்னிப்ரவேசம் செய்யும்படி சொன்னா ராம்
103. பதினான்காண்டு வனவாசம் முடிந்து அயோத்தி திரும்பினா ராம்
104. நந்திகிராமத்தில் தம்பி பரதனை இராமன் நேரில் கண்டா ராம்
105. கோலாகலமாய் இராமன் பட்டாபிஷேகம் நடந்து முடித்தா ராம்
106. இராமன் அழைத்தும் அனுமன் விண்ணுலகம் வர மறுத்தாராம்
107. சிரஞ்சீவியான அனுமனை நினைத்து சீதாதேவி மகிழ்ந்தா ராம்
108. இராமாயணம் படிப்போர்க்கு அனுமன் நற்கதி அருள்கின்றா ராம்

மன்னை பாசந்தியின் ராமாவதாரக் கீர்த்தனை

ராகம் புன்னாகவராளி தாளம் ஆதி

பல்லவி ரகுராமா அருளும் பரந்தாமா விஜய

துரிதகாலம் சீதா லக்ஷ்மண பரத சத்ருக்ன
ஹனுமத் சமேத பட்டாபிஷேகமகிழ் (ரகுராமா)

அநுபல்லவி ரகுராமனின் லீலை எண்ணிலடங்குமோ
ரகுநந்தனின் மகிமை சொல்லிலடங்குமோ (ரகுராமா)

சரணம் தாம்பத்யவாழ்வின் நெறிமுறைக்கே
ஏகபத்னிவிரதம் ராமாவதாரமே
மானுடஜென்மம் கடைத்தேறவே
ராமநாம திவ்ய சங்கீர்த்தனமே (ரகுராமா)

துரிதகாலம் இந்த்ராதி தேவர்கள் மன்னர்கள் முனிவர்கள்
ஜனங்கள் புடைசூழ பாசந்தி அகமகிழ் (ரகுராமா)



சமர்ப்பணம்

மறைந்த சங்கீத சாஹித்ய வித்வான் சுநாதகான
மன்னார்குடி ரா. பார்த்தசாரதி அய்யங்கார்
அவர்களின் ஞாபகார்த்தமாக இலவச வெளியீடு

இயற்றி வெளியிட்டவர்
கவிநயச்செல்வர் பல்லவி சிஷ்யன்
அருட்கவி மன்னை பாசந்தி

பெயர்	பார்த்தசாரதி சந்தானம் (மன்னை பாசந்தி)
பிறந்த தேதி	15.05.1958 மன்னார்குடி
பாராட்டு	'கவிநயச்செல்வர்' தமிழ் நாட்டு நல்வழி நிலையம் (19-08-2001)
திருவருள்	மன்னை ஸ்ரீராஜகோபாலனின் திருவருளும் குருகடாஷமும்
திருப்புமுனை	ஸ்ரீராமகிருஷ்ண மாணவர் இல்லம் மயிலாப்பூர் (1971-75)
இயற்றியவை	225 பாடல்களுக்கும் மேல் பல தெய்வங்களைப் போற்றி
உறுப்பினர்	ஸ்ரீவித்யாராஜகோபாலஸ்வாமி கைங்கர்யசபா மன்னார்குடி (2001முதல்)
மானசீக குரு	மன்னார்குடி சாஹித்ய கலாபூஷணம் பார்த்தசாரதி அய்யங்கார்
வளர்த்த குரு	ஸ்ரீரங்கம் பல்லவி நரசிம்மாச்சாரியார்
அபிமான குரு	உள்ளகரம் திரு நா. கோபாலகிருஷ்ண பாகவதர்
முகவரி	புதிய எண் 10 மல்லிகை அபார்ட்மெண்ட்ஸ்
	பார்த்திபன் தெரு, உள்ளகரம் சென்னை - 600091
	தொலைபேசி : 22421148 அலைபேசி : 9884424192 / 9841724192
	மின்னஞ்சல் : s_santhanam2006@yahoo.co.in
	இணையதளம் : www.mannaiparthasarathy.org

Sri Annai Printing Press , Adambakkam, Ch-88 Cell : 98403 00762